முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2016 சனவரி

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2016-01-30
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தரவும்.***

(3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு வினா வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***வினா வினைச் சொற்களின்*** *நிரலில் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பிரிவு A

இந்தப் பிரிவிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

(a) நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகத்தின் படி பரிப்பினை (liability) **பொருள் வரையறை செய்க.** (02 புள்ளிகள்)

(b) பரிப்பு ஒன்றின் ஏற்பிசைவுத் தேர்வு நிபந்தனைகளை (recognition criteria) **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது வரையறுக்கப்பட்ட **ABC கம்பனி** கீழ்வரும் கடன்களை **PQ வங்**கியிடமிருந்து பெற்றது :

| கடன் இல. | கடன் திகதி | கடன் தொகை | வட்டி வீதம் (ரூ.) |
|---|---|---|---|
| 578510020 | 2015.01.01 | 7 மில்லியன் | 12% |
| 578500004 | 2015.03.15 | 8 மில்லியன் | 15% |
| 578508903 | 2015.04.30 | 10 மில்லியன் | 11% |

2015 யூன் 01 ஆந் திகதி **ABC கம்பனி** ஒரு புதிய பொறித்தொகுதியை நிருமாணிக்க ஆரம்பித்ததுடன் இந்த நிருமாணப் பணிகள் 2016 செப்ரெம்பர் 30 ஆந் திகதி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிருமாண முடிவில் பொறித் தொகுதியின் கிரயம் ரூ. 15 மில்லியனாக இருக்கும். பணிப்பாளர் சபையானது இந்தப் பொறித் தொகுதியின் நிருமாணத்திற்கு 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது பெறப்பட்ட கடன்களைப் பயன்படுத்தி நிதியளிப்புச் செய்யத் தீர்மானித்தது.

கடன்படுகைக் கிரயமாக மூலதனப்படுத்தப்பட வேண்டிய தொகையினைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **அவிவா PLC** யின் ஆண்டு அறிக்கையிலிருந்து பிரித்தறியப்பட்டன.

| | **ரூ. (மில்லியன்)** |
|---|---|
| வரிக்குப் பிந்திய இலாபம் | 23 |
| பங்கிலாபங்கள் - சாதாரண பங்குகள் | 0.5 |

கீழுள்ள தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) சாதாரண பங்குகளின் நடப்புச் சந்தை விலை ரூ. 25/-.

(2) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டில் கொண்டிருந்த சாதாரண பங்குகளின் நிறையேற்றிய சராசரி எண்ணிக்கை : 100,000.

**நீர் செய்ய வேண்டியது :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) பங்கொன்றிற்கான வருவாய் (Earnings Per Share - EPS).

(b) விலை – வருமான விகிதம் (Price Earnings Ratio - PE).

(c) உழைப்பு விளைவு விகிதம் (Earning Yield Ratio). (05 புள்ளிகள்)

## வினா 04

நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தல் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தாளாண்மைகளின் (Specified Business Enterprises) கடமைகள் மூன்றினை (03) **கூறுக.** (05 புள்ளிகள்)

*பிரிவு A முடிவு*

# <u>பிரிவு B</u>

இந்தப் பிரிவிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

(a) அருவச் சொத்தொன்றின் ஏற்பிசைவுத் தேர்வு நிபந்தனைகள் இரண்டினை (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(b) **MM PLC** கம்பனியானது மங்கையரின் உயர் நாகரிக அணிகலன்களை உற்பத்தி செய்யும் வரையறுக்கப்பட்ட **MS** கம்பனியினை கொள்வனவு செய்ய எண்ணுகிறது. **MS** கம்பனி அதன் வியாபாரத் தன்மை காரணமாக பாரிய ஐந்தொகைச் சொத்துக்களைக் கொண்டிருக்கவில்லை. **MS** கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி அண்மையில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் **MS** கம்பனியின் மிகவும் பெறுமதிமிக்க சொத்து 20 ஆண்டுகளுக்கு மேலாக அது விருத்தி செய்த உற்பத்திக் குறிப் பெயரென (Brand Name) தெரிவித்திருந்தார். இந்த உற்பத்திக் குறிப் பெயரின் பெறுமதி ரூ. 1 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

   (i) வரையறுக்கப்பட்ட **MS** கம்பனி இந்த உற்பத்திக் குறிப் பெயரினை அதன் நிதிக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யமுடியுமா எனக் **கூறுக.** (02 புள்ளிகள்)

   (ii) **MM PLC** ஆனது வரையறுக்கப்பட்ட **MS** கம்பனியினை கொள்வனவு செய்யும் பட்சத்தில், **MM PLC** யின் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் இந்த உற்பத்திக் குறிப் பெயரின் சரியான கணக்கீட்டுக் கையாள்கையினை **கூறுக.** (03 புள்ளிகள்)

(c) **MM PLC** கம்பனியின் ஆராய்ச்சிப் பிரிவு தூசுகள் மற்றும் வியர்வைக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய புதிய நூல் இழையினை அபிவிருத்தி செய்வதற்கான ஆராய்ச்சியினை நடாத்துகின்றது. இந்த ஆராய்ச்சியில் வெற்றி பெறுமிடத்து, அது ஒரு பெரிய சாதனையாவதுடன் **MM PLC** யின் எதிர்கால வருமான மூலமாக அமையும்.

**MM PLC** யின் முகாமை பாரிய தொகையினை இந்த ஆராய்ச்சிக்கு செலவிடுகிறது. இந்த ஆராய்ச்சியின் மொத்தக் கிரயம் ரூ. 100 மில்லியனாக மதிப்பிடப்பட்டு உள்ளதுடன் அதில் ரூ. 50 மில்லியன் ஏற்கனவே செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செலவு செய்யப்பட்ட ரூ. 50 மில்லியனுக்கான கணக்கீட்டுக் கையாள்கையை அதற்கான உமது காரணத்துடன் **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட றோயல் நிற்வெயார் கம்பனியின்** 2015 மார்ச் 31 மற்றும் 2014 மார்ச் 31 ஆகிய திகதிகளில் நிதிநிலைக் கூற்றுக்களும் 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட றோயல் நிற்வெயார்**
**நிதிநிலைக் கூற்றுக்கள்**

*(ரூ.'000)*

| | **2015 மார்ச் 31 இல்** | | **2014 மார்ச் 31 இல்** | |
|---|---|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | | |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் :** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 15,280 | | 14,000 | |
| கழி : திரள் தேய்மானம் | (5,113) | 10,167 | (4,550) | 9,450 |
| | | | | |
| முதலீடுகள் | | 2,240 | | 1,900 |
| | | **12,407** | | **11,350** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | | |
| தொக்குகள் | 850 | | 600 | |
| வியாபார வருமதிகள் | 2,500 | | 2,900 | |
| வருமதியாகவுள்ள முதலீட்டு வருமானம் | 39 | | 50 | |
| காசும் காசுச் சமானங்களும் | 80 | 3,469 | 76 | 3,626 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **15,876** | | **14,976** |
| **<u>உரிமையாண்மையும் பரிப்புக்களும்</u>** | | | | |
| **உரிமையாண்மை :** | | | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்கு மூலதனம் | | 10,800 | | 9,000 |
| பொது ஒதுக்கம் | | 200 | | 2,000 |
| கைக்கொள் இலாபம் | | 1,753 | | 1,020 |
| | | **12,753** | | **12,020** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | | | |
| வங்கிக் கடன் | | 1,200 | | 1,450 |
| பணிக்கொடை ஏற்பாடு | | 420 | | 300 |
| | | **1,620** | | **1,750** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | | | |
| வியாபார சென்மதிகள் | | 1,357 | | 959 |
| அட்டுறு செலவுகள் | | 95 | | 174 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 46 | | 65 |
| செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டி | | 5 | | 8 |
| | | **1,503** | | **1,206** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **15,876** | | **14,976** |

**வரையறுக்கப்பட்ட றோயல் நிற்வெயார்**
**2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்று** *(ரூ.'000)*

| | |
|---|---|
| விற்பனை | 22,000 |
| விற்பனைக் கிரயம் | (13,800) |
| **மொத்த இலாபம்** | **8,200** |
| **ஏனைய வருமானம் :** | |
| முதலீட்டு வருமானம் | 560 |
| | 8,760 |
| **கழி : செலவுகள்** | |
| விநியோகச் செலவுகள் | 4,680 |
| நிர்வாகச் செலவுகள் | 2,730 |
| நிதிச் செலவுகள் | 467 |
| **வரிக்கு முன் இலாபம்** | **883** |
| கழி : வருமான வரி | 150 |
| **வரிக்குப் பின் இலாபம்** | **733** |
| பிற முற்றடக்க வருமானம் | - |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | **733** |

கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டிற்கான வங்கிக் கடன் வட்டிச் செலவு ரூ. 217,000/- ஆகும். நிதிச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள எஞ்சிய தொகையானது தவறுதலாக நிதிச் செலவுகளின் கீழ் காட்டப் பட்டுள்ள, ஆண்டின்போது செலுத்திய சாதாரண பங்கிலாபங்கள் ஆகும்.

(2) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் விற்பனை ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூ. 90,000/- ஆகும். கணக்கேடுகளில் இதற்கான ஏற்பாடு செய்யப்படவில்லை.

(3) கம்பனி ஆண்டின்போது பணிக்கொடைகள் எதனையும் செலுத்தியிருக்கவில்லை.

**நீர் செய்ய வேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட றோயல் நிற்வெயார் கம்பனியின்** 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகரக் காசுப் பாய்வினை நேரில் முறையைப் (Indirect method) பயன்படுத்தித் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

(a) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி **STV கம்பனி** எந்திரமொன்றினை ரூ. 2,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்தது. எந்திரத்தின் பொருளியற் பயன்தரும் ஆயுட் காலம் 4 ஆண்டுகளாகும். 4 ஆண்டுகள் முடிவில் எந்திரத்திற்கு ஒடிவுப் பெறுமதி இல்லை. கம்பனியானது இந்த எந்திரம் மீது கொள்வனவு ஆண்டிலேயே முழு மூலதனப் படியையும் (capital allowances of 100%) கோரும் உரித்துடையது. கம்பனி வரி வீதம் 28%.

(i) 2016 மார்ச் 31 ந் திகதியில் இந்த ஊடுசெயலினால் ஏற்படும் பிற்போடப்பட்ட வரிச் சொத்து / பரிப்பினைக் **கணிக்குக.**

(ii) எதிர்வரும் ஆண்டுகளில் மேலே (a) (i) இல் பெற்ற விடை எவ்வாறு கணக்கிற் கொள்ளப் படுமென **விபரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) குத்தகையொன்றினை நிதிக் குத்தகையாக வகைப்படுத்துவதற்கு வழியமைக்கும் மூன்று (03) காட்டிகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பிரிவு B முடிவு*

# பிரிவு C

இந்தப் பிரிவிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

***பீம்* PLC** *கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தப்பட்ட ஒருகம்பனியாகும்.* 2015 *மார்ச்* 31 *ஆந் திகதியில் அந்தக் கம்பனியின் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :*

***பீம்* PLC**

**2015 *மார்ச்* 31 *ஆந் திகதி பரீட்சை மீதி*** *(ரூ.'000)*

| | Dr. | Cr. |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் - 2 மில்லியன் சாதாரண பங்குகுள் | | 25,000 |
| கைக்கொள் இலாபம் - 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியில் | | 2,020 |
| 13% தனிச்சங்கள் | | 7,500 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | | |
| மோட்டார் வாகனங்கள் | 26,500 | |
| அலுவலக உபகரணம் | 8,650 | |
| தளபாட இணைப்புகள் | 3,100 | |
| <u>தேய்மான ஏற்பாடு – 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியில்</u> | | |
| மோட்டார் வாகனங்கள் | | 10,600 |
| அலுவலக உபகரணம் | | 6,488 |
| தளபாட இணைப்புகள் | | 1,860 |
| பங்குகளில் முதலீடு (இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பினது) | 15,000 | |
| தொக்குகள் | 3,800 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 24,500 | 14,600 |
| வரிமதிப்பாண்டு 2013/14 க்கான வருமான வரிக் கணக்கு | | 360 |
| வங்கி மேலதிகப் பற்று | | 1,100 |
| காசுக் கையிருப்பு | 600 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி | | 360 |
| விற்பனைக் கிரயம் / விற்பனைகள் | 57,443 | 92,650 |
| முதலீட்டு வருமானம் | | 1,200 |
| செலுத்திய இடைக்கால சாதாரண பங்கிலாபம் | 1,000 | |
| நிருவாகச் செலவுகள் | 10,150 | |
| விற்பனை, விநியோகச் செலவுகள் | 9,300 | |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 2,100 | |
| நிதிச் செலவுகள் | 850 | |
| செலுத்திய வருமான வரி | 745 | |
| | **163,738** | **163,738** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) 2014 செப்ரெம்பர் 30 ஆந் திகதி கம்பனி அதன் பழைய வாகனமொன்றினை ஒரு புதிய வாகனத்திற்காக பரிமாற்றம் செய்தது. பரிமாற்றத் திகதியில் பழைய வாகனத்தின் ஏட்டுப் பெறுமதி ரூ. 576,000/-. இந்த பழைய வாகனம் 2011 ஏப்ரல் 01 ஆந் திகதியில் கொள்வனவு செய்யப்பட்டது. கம்பனி புதிய வாகனத்திற்கான எஞ்சிய தொகையான அதன் சந்தைப் பெறுமதியின் 2/3 பங்கான ரூ. 900,000/- இனை பணமாக செலுத்தியது. இந்தக் காசுக் கொடுப்பனவு கொள்வனவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் கணக்கேடுகளில் மேற்கொள்ளப்பட வில்லை.

(2) ஆண்டின்போது கம்பனி கீழ்வரும் சொத்துக்களை கொள்வனவு செய்தது :

| **திகதி** | **சொத்து** | **பெறுமதி (ரூ.)** |
|---|---|---|
| 2014.04.30 | 3 நிறைவேற்றுனர் கதிரைகள் | 18,000 |
| 2015.02.01 | பதிகருவி | 135,000 |

(3) ஆண்டின்போது கீழ்வரும் சொத்து கம்பனிப் பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்டது :

| **விலக்கிய திகதி** | **சொத்து** | **கொள்வனவுக் கிரயம் (ரூ.)** | **2014.04.01 இல் திரள் தேய்மானம் (ரூ.)** |
|---|---|---|---|
| 2014.12.31 | மடிக்கணினி | 110,000 | 110,000 |

(4) தேய்மானம் கிரயத்தில் அல்லது மீள்மதிப்புப் பெறுமதியில் நேர்கோட்டு அடிப்படையில் கணிக்கப்படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரண பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

மோட்டார் வாகனங்கள் : 5 ஆண்டுகள்

அலுவலக உபகரணம் : 10 ஆண்டுகள்

தளபாட, இணைப்புகள்: 10 ஆண்டுகள்

(5) வியாபார வருமதிகள் தொடர்பாக கீழ்வரும் செம்மையாக்கங்கள் செய்யப்பட வேண்டும் :

- ரூ. 45,000/- தருமதியாக இருந்த வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலை அடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டார். இந்தத் தொகைக்கு முன்னைய ஆண்டில் ஐயுறவுக் கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- 2013/14 ஆம் ஆண்டில் அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கப்பட்ட ரூ. 61,000/- நடப்பு ஆண்டில் கம்பனியினால் பெறப்பட்டது. இவ்வாறு கிடைத்த தொகை வியாபார வருமதிகள் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டது.

- நடப்பு ஆண்டிற்கு மேலதிகமாக ரூ. 93,000/- ஐயுறவுக் கடன் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(6) 2015 மார்ச் 31 ஆந் திகதி ஏற்பாடு செய்யப்பட வேண்டிய அட்டுறு செலவுகள் :

| | **ரூ.** |
|---|---|
| அலுவலக வாடகை | 800,000 |
| விற்பனை ஊழியருக்கு உபகாரக் கொடுப்பனவு | 68,000 |

(7) நடப்பு ஆண்டிற்கான தனிச்ச வட்டி செலுத்தப்படவோ அல்லது அதற்கு ஏற்பாடு செய்யப்படவோ இல்லை.

(8) ஆண்டின் இறுதியில் முதலீட்டின் பெறுமதி ரூ. 950,000/- இனால் சேத இழப்பு அடைந்தமை தெரிய வந்துள்ளது.

(9) முன்னைய ஆண்டின் இறுதித் தொக்கு ரூ.35,000/- இனால் மிகையாக மதிப்பிடப்பட்டிருந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இது செம்மையாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

(10) வரிமதிப்பாண்டு 2014/15 க்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு ரூ. 750,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(11) 2015 மே 20 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், 2015 மார்ச் 31 ஆந் திகதியில் இருந்த சாதாரண பங்குகள் ஒவ்வொன்றிற்கும் இறுதிப் பங்கிலாபமாக ரூ. 1/- வீதம் வழங்குவதற்கு கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(12) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2015 யூன் 20 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**நீர் செய்ய வேண்டியது :**

(a) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.** (08 புள்ளிகள்)

(b) 2015 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (08 புள்ளிகள்)

(c) 2015 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்றினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(d) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான அசைவுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(a) 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி **அனுலா PLC** ஆனது **வரையறுக்கப்பட்ட கேமா கம்பனியின்** 80% சாதாரண பங்கு மூலதனத்தை கொள்வனவு செய்தது.

2015 மார்ச் 31 ஆந் திகதியில் **அனுலா PLC** மற்றும் **வரையறுக்கப்பட்ட கேமா கம்பனிகளின்** நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2015 மார்ச் 31 ஆந் திகதியில்**
**நிதிநிலைக் கூற்றுக்கள்** *(ரூ.'000)*

| | அனுலா PLC | வ / வு கேமா கம்பனி |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் (ஏட்டுப் பெறுமதியில்):** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 28,600 | 9,550 |
| | 28,600 | 9,550 |
| **முதலீடு :** | | |
| வ/வு கேமா கம்பனியின் சாதாரண பங்குகளில் | 13,500 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 5,650 | 3,300 |
| வியாபார வருமதிகள் | 6,430 | 4,425 |
| காசும் காசுச் சமானங்களும் | 1,210 | 525 |
| | **13,290** | **8,250** |
| | **55,390** | **17,800** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகுள் | 41,000 | 13,000 |
| **ஒதுக்கங்கள் :** | | |
| பொது ஒதுக்கம் | 1,100 | 600 |
| கைக்கொள் இலாபம் | 4,120 | 1,800 |
| | 5,220 | 2,400 |
| **பரிப்புக்கள் :** | | |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன் | - | 860 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 8,500 | 1,350 |
| அட்டுறு செலவுகள் | 550 | 155 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 120 | 35 |
| | 9,170 | 1,540 |
| | **55,390** | **17,800** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) சுவீகரிப்புத் திகதியின்போது **வரையறுக்கப்பட்ட கேமா கம்பனி** அதன் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தது. இந்த மீள்மதிப்பீட்டின்படி, காணியின் பெறுமதி அதன் ஏட்டுப் பெறுமதியை விட ரூ. 1.5 மில்லியன் அதிகமானதாக காணப்பட்டது. ஏனைய சொத்துக்களின் சீர்மதிப்புக்களில் மாற்றமில்லை. இந்த சீர்மதிப்புச் செம்மையாக்கம் இன்னும் செய்யப்படவில்லை.

(2) சுவீகரிப்புத் திகதியில் கட்டுப்பாடற்றோர் பாத்தியதையின் சீர்மதிப்பு ரூ. 3,900,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(3) 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியில் **வரையறுக்கப்பட்ட கேமா கம்பனியின்** கணக்கேடுகளில் கீழ்வரும் பேரேட்டு மீதிகள் காணப்பட்டன :

பொது ஒதுக்கம் - ரூ. 400,000/-

கைக்கொள் இலாபம் - ரூ. 400,000/-

(4) 2015 மார்ச் 31 ஆந் திகதியின் ஒன்றித்தல் மீதான நன்மதிப்பு ரூ. 60,000/- இனால் சேத இழப்பு அடைந்திருந்தமையினை **அனுலா PLC** அறிந்துகொண்டது.

(5) **அனுலா PLC** அதன் வியாபாரத் தொக்குகளை **வரையறுக்கப்பட்ட கேமா கம்பனிக்கு** கிரயத்தில் 20% இலாப எல்லை வைத்து விற்பனை செய்கிறது. 2015 மார்ச் 31 ஆந் திகதி **கேமா கம்பனி** யின் தொக்குகள் **அனுலா PLC** யிடமிருந்து கொள்வனவு செய்த ரூ. 66,000/- பெறுமதியான பொருட்களை உள்ளடக்கியது.

(6) 2014 ஏப்ரல் 02 ஆந் திகதி அனுலா **PLC** ரூ. 1,600,000/- இனை முன்கொணர் பெறுமதியாகக் கொண்ட மோட்டார் கார் ஒன்றினை கேமா கம்பனிக்கு ரூ. 1,760,000/- க்கு விற்பனை செய்தது. இரு கம்பனிகளும் மோட்டார் வாகனங்களை கிரயத்தில் 25% இல் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்கின்றன.

**நீர் செய்ய வேண்டியது :**

2015 மார்ச் 31 ஆந் திகதியில் **அனுலா PLC** யின் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.**

(18 புள்ளிகள்)

(b) LKAS 27 – ‘‘ஒன்றித்த மற்றும் வேறான நிதிக் கூற்றுக்கள்’’ நியமத்திற்கு அமைவாக கீழ்வருவனவற்றை பொருள் வரையறை செய்க.

(i) மேன்னிலைக் கம்பனி (Parent)

(ii) உப கம்பனி (Subsidiary) (04 புள்ளிகள்)

(c) விகிதப் பகுப்பாய்வின் (ratio analysis) மூன்று (03) வரையறைகளைக் **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |